Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 90/2020** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW**10 |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | குமார் |
| Father Name | : | தவமணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.09.2024

(எதிரி ஆஜர்)

**முதன்மை விசாரணை :–**

நான் இராமநாதபுரம் வள்ளல்பாரி வடக்குத் தெருவில் வசித்து வருகிறேன். இராமநாதபுரம் ஜெகன் தியேட்டரில் மேலாளராக பணிபுரிகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ராஜாவை தெரியும். பார்த்திருக்கிறேன். தியேட்டருக்கு எதிரில் உள்ள பெட்டிக்கடையில் பீடி, சிகரெட் வாங்கும்போது பார்த்திருக்கிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 07.00 மணியிலிருந்து 08.00 மணிக்குள் இருக்கும். சம்பளம் பிரிக்கிறது சம்மந்தமாக ஜெகன் தியேட்டருக்கு இடதுபக்கத்தில்

உள்ள அண்ணாசிலை அருகில் ராஜாவுக்கும், இன்னொரு பையனுக்கும் வாக்குவாதம், சண்டை நடந்தது. அந்த இன்னொரு பையனை நான் பார்த்தால் அவரை அடையாளம் காட்டமுடியும். ஆஜர் எதிரிதான் அந்த இன்னொரு பையன். நானும், எங்கள் தியேட்டர் செக்யூரிட்டி காளி யப்பனும் சத்தம்கேட்டு அந்த இடத்திற்கு சென்று பார்த்தோம். ராஜா இரத்தக்காயத்துடன் இடதுபக்கம் சாய்ந்து கீழேவிழுந்து கிடந்தார். ராஜாவின் முதுகில் இரத்தம் இருந்தது. அந்த இடத்தில் கூட்டமாக இருந்தார்கள். போலிசார் அந்த இடத்திற்கு வந்து விசாரித்தார்கள். பிறகு ஒரு 10 நிமிடத்தில் ஆம்புலன்ஸ் வந்தது. அந்த ஆம்புலன்ஸில் ராஜாவை ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் விசாரித்ததில் ராஜாவும், ஆஜர் எதிரியும் வாரச்சம்பளம் வாங்கியதை பிரித்துக் கொள்வதில் பிரச்சனை ஏற்பட்டதாக அங்கே இருந்த கொத்தனார்கள், சித்தாள்கள் பேசிக்கொண்டார்கள், பேசிக்கொண்டதை நான் கேட்டேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

சம்பளம் நடந்த அன்றே போலிசார் என்னை விசாரித்தனர், விசாரித்து சாட்சியாக இருக்கிறீர்களா என்று கேட்டு எழுதிக்கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேன். அதன் பிறகு என்னை போலிசார் யாரும் விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரியின் பெயர், அப்பா பெயர், ஊர் பெயர் எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு முன்போ அல்லது அதற்கு பின்போ ஆஜர் எதிரியை நான் பார்த்தது கிடையாது. 4 வருடங்கள் கழித்து இன்றுதான் ஆஜர் எதிரியை பார்க்கிறேன். ஜெகன் தியேட்டருக்கு உள்பக்கத்தில் என் அலுவலகம் இருக்கிறது. ஜெகன் தியேட்டருக்கு 4 பக்கத்திலும் சிசிடிவி கேமிராக்கள் இருக்கிறது. அண்ணாசிலை ஜெகன் தியேட்டரிலிருந்து சுமார் 400 அடி தூரத்தில் இருக்குமா என்று கேட்டால் சுமார் 80 அடி தூரத்தில் இருக்கிறது. ராஜாவுடன் நான் பேசியது கிடையாது. அவர் யார், எந்த ஊர்க்காரர், அவருடைய அப்பா பெயர் என்ன என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. சத்தம்கேட்டுதான் நான் போய் பார்த்தேன். அப்போது அங்கு சுமார் 30, 40 பேர் கூட்டமாக இருந்தார்கள். அண்ணாசிலையை சுற்றி 4 பக்கமும் இடைவிடாது கடைகள் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். போலிசார் கடைக்காரர்களையும் விசாரித்தார்கள். சம்பவ இடத்திற்கு நான் சென்று பார்த்தபோது அங்கிருந்த நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது, ஆண்களும், பெண்களும் கூடியிருந்தார்கள். நான் முதன்முதலில்

பார்த்தபோது ராஜா குத்துப்பட்டு தரையில் கிடந்தார். எதிரியும், ராஜாவும் சண்டை போட்டதை நான் நேரில் பார்க்கவில்லை. அந்த இடத்தில் இருந்தவர்கள் சொன்னதை வைத்துத்தான் எனக்கு விவரங்கள் தெரியவந்தது. மற்றபடி நேரில் நான் பார்க்கவில்லை. போலிசார் விசாரணை செய்தபோதும் சத்தம்கேட்டுத்தான் நான் போய் பார்த்தேன் என்றும், அப்போது ராஜா குத்துப்பட்டு கிடந்தார் என்றும் சொன்னேன். நான் விசாரித்தபோது தான் என்ன பிரச்சனை என்று தெரியவந்தது என்று போலிசாரிடம் சொன்னேன். ராஜாவும், எதிரியும் சண்டைபோட்டதை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரித்தபோது சொல்லவில்லை. எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. நான் சினிமா காட்சிகள் முடிந்த பிறகு அன்றைய தினம் நடந்த காட்சிகளின் வரவு, செலவுகளை முடித்துவிட்டுத்தான் வீட்டிற்கு செல்வேன் என்று சொன்னால் சரிதான். காலை 10.00 மணி அல்லது 10.30 மணிக்குள் அலுவலகத்திற்கு வந்துவிடுவேன். நான் முதன்மை விசாரணையில் சொன்னதுபோல் நான் எதையும் பார்க்கவில்லை என்றும், எதையும் கேள்விப்படவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C. 90/2020** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW9** |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

Name : பிச்சை

Father Name : கணேசன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.09.2024

(எதிரி ஆஜர்)

**முதன்மை விசாரணை**–

நான் இராமநாதபுரம் ஆசாரி தெருவில் வசித்து வருகிறேன். நான் இராமநாதபுரம் பஸ்நிலையம் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் இருந்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ராஜாவை தெரியும். அவர் கொத்தனாராக தொழில் செய்து வந்தார். ஆஜர் எதிரியை தெரியாது. சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒருநாள் சுமார் காலை 10.00 மணிக்கு நான் சவாரிபோய்விட்டு ஆட்டோ ஸ்டாண்டிற்கு வந்தேன். அப்போது ராஜா ஆட்டோ ஸ்டாண்டிற்கு அருகில் இருந்த பூங்காவிற்கு

வெளியில் விழுந்துகிடந்தார். நான் போய் அவரை பார்த்தபோது முதுகில் விலா பகுதியில் காயம் இருந்தது. அங்கு கூட்டமாக இருந்தார்கள். காயம்பட்ட ராஜாவை ஆம்புலன்ஸில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றார்கள். நான் அங்கு விசாரித்தபோது காயம்பட்ட ராஜாவிற்கும், குத்திய நபருக்கும் சம்பள பிரச்சனை என்றும், பணம் கொடுக்கல், வாங்கலில் பிரச்சனை என்றும் கேள்விப்பட்டேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u> –

சம்பளப் பிரச்சனை, பணம் கொடுக்கல், வாங்கல் பிரச்சனை எதுவும் என்முன்னால் நடக்கவில்லை. நான் முதன்மை விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் நான் எங்கும் செல்லவில்லை என்றும், நான் எதையும் பார்க்கவில்லை என்றும், ஆட்டோ டிரைவர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>**– இல்லை.